DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

| | | |
|---|---|---|
| Calendar | ... | |
| Miscellaneous | ... | |
| Preliminary Register | ... | Case No: C.C. No. 358/2022 |
| Session | ... | |
| | | Prosecution / PW-4 |
| Deposition of Witness for | ... | Defence / Court |

---

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி.வசந்தாராணி |
| Father's Name (or) | | |
| Husband Name | : | க/பெ.சமயமுத்து |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

(Accused prsent)

Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 01.08.2025

---

<u>முதல் விசாரணை</u>

1. நான் தற்போது திருப்பாலைக்குடியில் குடும்பத்தோடு குடியிருந்து வருகிறேன். வழக்கின் புகார்தாரர் அ.சா.ஆ.1 ஸ்ரீஜா எனது கணவரின் அண்ணன் மகள் ஆவார். ஆஜர் எதிரியையும் எனக்கு தெரியும். ஆஜர் எதிரி எனது கணவரின் அண்ணன் மகளான ஸ்ரீஜாவை வேலைக்கு செல்லும் வழியிலும் வரும் வழியிலும் பின் தொடர்ந்து அவளை

காதலிப்பதாக அடிக்கடி சொல்லிவந்ததுள்ளார்.

2.ஸ்ரீஜா திருப்பாலைக்குடியில் உள்ள வி.எம். கிளினிக்கில் வேலை பார்த்து வந்தார். எதிரி ஸ்ரீஜாவை பின் தொடர்ந்து தொந்தரவு செய்ததை அவள் என்னிடமும் பலமுறை கூறிவந்துள்ளார். ஸ்ரீஜாவின் தாயார் சொல்லி எதிரியின் வீட்டிற்கு சென்று எதிரியின் பொற்றோரிடம் சொல்லி எதிரியை கண்டுக்கும் படி சொன்னார்.

3. நானும் அவரது வீட்டிற்கு சென்று எதிரியின் பெற்றோரிடமும் எதிரியிடமும் இது பற்றி கண்டித்தேன். ஊரில் பெரியவர்களிடம் சொல்லியும் கண்டித்தோம். ஆனால் எதிரி எதையும் பொருட்படுத்தவில்லை கேட்கவில்லை. மீண்டும் எதிரி ஸ்ரீஜாவை வேலைக்கு செல்லும் போதேல்லாம் தொடர்ந்து டார்ச்சர் செய்துள்ளார்.17.06.2022 தேதி அதே போல் வேலைக்கு சென்று வீடு திரும்பும்போது பின் தொடர்ந்து வந்ததால் 24.06.2022ம்தேதி வேறு வழியில்லாமல் காவல் நிலையத்தில் ஸ்ரீஜா இது சம்மந்தமாக புகார்கொடுத்த விவரம் எனக்கு தெரியும்.இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. எனது வீடும் எதிரியின் வீடு பக்கத்து வீடுதான் என்றால் சரியல்ல. எதிரியின் வீடானது சிறிது தூரம் தள்ளி உள்ளது. புகார்தாரரான ஸ்ரீஜாவை எதிரி கேலி செய்ததை நான் கண்ணால் பார்க்கவில்லை என்றால் சரிதான். புகார்தாரர் மற்றும் அவரது தாயார்சொல்லி தான் தெரியும். நான் இவ்வழக்கின் புகார்தாரருடைய சித்தி என்றால் சரிதான்.

2. இவ்வழக்கு சம்பவத்திற்கு முன்னதாகவே எதிரி புகார்தாரரை கேலி செய்தது தொடர்பாக நாங்கள் ஊர்க்காரர்களிடம் முறையிட்டோமா என்றால் முறையிட இருந்தோம். ஆனால் எதிரி தொடர்ந்து புகார்தாரரை தொந்தரவு செய்து வந்ததால் நேரடியாக போலிசாரிடம் புகார் அளித்து விட்டோம். இவ்வழக்கு சம்பவத்திற்கு முன்னதாக புகார்தாரர் எதிரி மீது புகார் ஏதேனும் கொடுத்துள்ளாரா என்றால்

இல்லை. ஆனால் எதிரியின் வீட்டாரிடம் சொல்லி அவரை கண்டிக்க சொன்னோம்.

3.17.06.2022 தேதி நான் மற்றும் இவ்வழக்கின் பிற சாட்சிகளான எனது உறவினர்கள் எதிரியை தாக்கியதாக திருப்பாலைக்குடி காவல்நிலையத்தில் புகார் பதிவு செய்யப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். நாங்கள் எதிரி மீது புகார் கொடுத்ததால் எதிரியானவர் எங்கள் வீட்டிற்கு வந்து தகராறு செய்துவிட்டு எங்களை பழிவாங்கும் எண்ணத்தில் எங்கள் மீது பொய் புகார் கொடுத்துவிட்டார்.

4. நான் எதிரி எங்கள் வீட்டிற்கு வந்து எங்களை அடித்து தகராறு செய்ததாக வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் எதிரி எங்கள் மீது புகார் கொடுத்த பின்பு தான் நாங்கள் எதிரி மீது புகார்கொடுத்தோம் என்றாலும் சரியல்ல. இவ்வழக்கு தொடர்பான புகாரை 24.06.2022 தேதி தான் நாங்கள் காவல் நிலையத்தில் கொடுத்தோம் என்றால் சரிதான்.

5. நாங்கள் 24.06.2022 தேதி எதிரி மீது புகார் கொடுப்பதற்கு முன்னதாகவே எதிரி எங்கள் மீது அவரை தாக்கியதற்காக 17.06.2022 தேதி புகார் கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. நாங்கள் தான் முதலில் புகார் கொடுத்தோம். மேற்படி நாங்கள் கொடுத்த புகாரில் இருந்து தப்பிப்பதற்காக எதிரி பின்னிட்டு யோசித்து பொய்யாக எங்கள் மீது புகார்கொடுத்துவிட்டார்.

6.எதிரி புகார்தாரரை கேலி செய்தது தொடர்பாக எந்த காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம் என்றால் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார்கொடுத்தோம்.எதிரி புகார்தாரரை கேலி செய்தது தொடர்பாக திருப்பாலைக்குடி காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. திருப்பாலைக்குடி காவல் நிலையத்திலும் புகார்

கொடுத்தார்கள். மேற்படி புகாரை யார் எப்போது திருப்பாலைக்குடி காவல் நிலையத்தில் கொடுத்தார்என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது.

7.நான் எதிரி புகார்தாரை கேலிசெய்ததாக வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் மற்றும் இவ்வழக்கின் பிற சாட்சிகளான எனது குடும்பத்தார் எதிரியை தாக்கிவிட்டு அதிலிருந்து தப்பிப்பதற்காக எதிரி மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me/before me in
open court,interpreted/read over
to the witness and admitted by the
deponent to be correct.

Sd.-/J.Antony Rishandev,
Judicial Magistrate,
Thiruvadanai.